பக்கங்கள்: 10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 19 வெள்ளிக்கிழமை 05.11.2021 கதிர் 365

இனி இது ரகசியம் அல்ல!

இன்று காலைக்கதிரின் தலைப்பு செய்தியை - பக்கத்தில் - வாசித்ததும் நான் நேற்று சஸ்பென்ஸில் நிறுத்திய விடயம் யாது என்பதை வாசகர்கள் ஊகித்திருப்பார்கள் என்று நம்புகிறேன்.

2009 இல் யுத்தம் முடிந்த பின்னர், 2011ஆம் பக்கம்02 »

# சுமந்திரன் குழுவை அழைக்கிறது அமெ.!

## பத்து நாள்களில் வொஷிங்டனில் பேச்சு இராஜதந்திரக் குழப்பத்தில் கொழும்பு

கொழும்பு, நவம்பர் 05

இலங்கைத் தமிழர்களின் அரசியல் பிரச்சினையில் இந்தியாவுடன் சேர்ந்து கைகோர்த்து, காய் நகர்த்தத் தீர்மானத்திருக்கும் அமெரிக்கா, அதனை ஒட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் உட்பட தமிழர் தரப்பு சட்ட நிபுணர் குழு ஒன்றை வொஷிங்டன் டி.ஸிக்கு அழைத்து, தமிழர் தரப்பின் அரசியல் நிலைப்பாட்டை கேட்டறிந்து, தெளிவு படுத்திக்கொள்ள தீர்மானித்திருக்கின்றது.

அமெரிக்காவின் இந்த நகர்வு பற்றிய தகவல்கள் கொழும்பு அரசுத் தரப்புகளால் கசியவிடப்பட்டிருக்கின்றது. இவ்விடயத்தை ஒட்டி கொழும்பு, பெரும் இராஜதந்திரச் சீற்றத்தில் இருப்பதாகவும் அந்த தரப்புக்கள் உறுதிப்படுத்துகின்றன. ☞10



## கூட்டமைப்பு எம்.பிக்களுடன் 9இல் இந்தியத் தூதர் பேச்சு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்தியத் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அண்மையில் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயுடனான சந்திப்பின்போது, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பை அதன் தலைவர் இரா.சம்பந்தன் கோரியிருந்தார்.

இதற்கமைய எதிர்வரும் 9ஆம் திகதி சந்திப்பு நடைபெறவுள்ளது.

## சுகாதார வழிகாட்டலை மீறினால் மீண்டும் ஒரு கொரோனா அலை

### ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை

இவ்வார இறுதியில் நீண்ட விடுமுறை இருப்பதால் தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு சுகாதார அமைச்சு, பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. சுகாதார வழிகாட்டுதல்களைப் புறக்கணித்து பொதுக் கூட் டங்கள் மற்றும் நிகழ்வுகளில் ஈடுபடுவது மீண்டும் ஒரு கொரோனா அலைக்கு வழிவகுக்கும் எனவும் சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் நேற்று ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:-

இன்று (நேற்று) தீபாவளி விடுமுறை தினம் ☞2

## ஈஸ்டர் தாக்குதல் பிரதான சூத்திரதாரிகளை கடுமையாகத் தண்டித்தாலே நீதி கிடைக்கும்

### பேராயருடனான சந்திப்பின் பின் சஜித் கருத்து

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பலியானவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமானால் இந்தத் தாக்குதலுக்கு மூலகாரணமாகச் செயற்பட்டவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் காலை கொழும்பில் உள்ள பேராயரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

அதன்பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் ஊடகங்களுக்குக் கருத்துத் ☞2



## பென்டோரா ஆவணம்;

## இடைக்கால அறிக்கை விரைவில் கோட்டாவிடம்

பிரபல செல்வந்தர்களின் இரகசிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் பென்டோரா ஆவணத்தில் வெளிக்கொணரப்பட்ட விடயங்கள் குறித்து முன்னாள் அமைச்சர் நிரூபமா ராஜபக்ஷவின் கணவரான வர்த்தகர் திருக்குமார் நடேசன் தொடர்பில் ☞10



## மீளவும் எகிறும் தொற்று நேற்று 592 பேர் பாதிப்பு

### மேலும் 15 பேர் சாவு

இலங்கையில் நேற்று 592 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய நாட்டில் இது வரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 43 ஆயிரத்து 385 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் நாட்டில் மேலும் 354 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய இதுவரை 5 இலட்சத்து 14 ஆயிரத்து 234 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து ☞10

## 12 மாவட்டங்களில் சீரற்ற காலநிலை!

இரத்தினபுரி, கேகாலை, நுவரெலியா, கண்டி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், பதுளை, புத்தளம், கொழும்பு மற்றும் காலி உள்ளிட்ட 12 மாவட்டங்களில் சீரற்ற காலநிலை நிலவுகின்றது.

ஆயிரத்து 504 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 34 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 3 வீடுகள் முழுமையாகவும், 432 வீடுகள் பகுதியவும் ☞2

## வாள்வெட்டு வன்முறையில் ஈடுபட்ட 10 சிறுவர்கள் கைது

### யாழ்.பொலிஸார் அதிர்ச்சித் தகவல்

யாழ்ப்பாணத்தில் சிறுவர்களால் நடத்தப்பட்ட வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். அத்துடன் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 10 சிறுவர்கள் யாழ்.குற்றத் தடுப்புப் பிரிவினரால் ☞2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண்டில் – சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் – இப்படித்தான் சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராசா, சுரேஷ் பிறேமச்சந்திரன் போன்ற கூட்டமைப்புத் தலைவர்களை அமெரிக்கா, வொஷிங்டன் டி.ஸிக்கு அழைத்துப் பேசியது. அதன் பின்னர்தான் ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்குக் கிடுக்கிப்பிடி போடும் போக்கை அமெரிக்கா முன்னெடுத்தது.

இப்போது நிலைமை வேறு. இலங்கையில் சீன ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் தனித்து இந்தியாவினால் காத்திரமாகக் காரியமாற்ற முடியாது இருப்பதாக வொஷிங்டன் கருதுகின்றதாம். அதனால் இலங்கை விடயங்களைப் புதுடில்லியுடன் கூட்டிணைந்து முன்னெடுக்க வொஷிங்டன் தலைமை தீர்மானித்திருப்பதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

இது குறித்து வொஷிங்டன் – புதுடில்லி உயர் மட்டங்களில் இறுக்கமான – இணக்கமான – முடிவு எடுக்கப்பட்டமையை அடுத்துத்தான் தமிழரின் பிரச்சினை விவகாரத்தை அமெரிக்காவும் புதுடில்லியும் கூட்டுச் சேர்ந்து கையாளும் தந்திரோபாயம் வகுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அமெரிக்கா – இந்தியா – ஜப்பான் – ஆஸ்திரேலியா ஆகியவை புதிதாக ஒன்றிணைந்து அமைத்திருக்கும் 'குவாட்' அமைப்பும், இந்திய – அமெரிக்க இணை ஊடாக இந்த விடயத்தை – தமிழர் அரசியல் தீர்வு விவகாரத்தை – கையில் எடுத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. சீனாவின் ஆக்கிரமிப்பு விஸ்தாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான துரும்பாக தமிழர் அரசியல் தீர்வு விவகாரம் மாற்றப்படும் சூழல் ஏற்பட்டிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

எனினும் இந்நகர்வு விடயம் கொழும்புக்கு நேரத்துடன் கசிந்து விட்டது. கொழும்பு உஷாராகி உள்ளது. இந்தக் கூட்டுச் செயற்பாடு முன்நகர்த்தப்படாமல் தடுப்பதற்கான விரைவு இராஜதந்திர நடவடிக்கைகளை மளமளவென்று கொழும்பு ஆரம்பித்துள்ளது.

சீன ஆதரவுப் போக்கைப் பொத்தென்று கைவிட்டு, அமெரிக்க – இந்தியப் பக்கம் சாயும் கொழும்பின் போக்கு, புலம்பெயர் தமிழர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நேரடிப் பேச்சு என்ற ஜனாதிபதியின் அறிவிப்பு, வடக்கு ஆளுநர் மாற்றம் என்று இவையெல்லாம் 'தென்னையில் தேள் கொட்ட, பனையில் நெறி கட்டிய கதையாக' அரங்கேறத் தொடங்கின.

சுமந்திரன் உட்பட தமிழர்களின் சட்ட நிபுணர்கள் குழு வொஷிங்டன் செல்லும் விடயம் வடக்கின் புதிய ஆளுநருக்கு பல வாரங்களுக்கு முன்னரே – அவர் ஆளுநராகப் பதவி ஏற்க முன்பே – தெரியும் என்றால், கொழும்பின் ஊடுருவல் உத்தியை மெச்சத்தான் வேண்டும்.

கடந்த ஜூலை 16ஆம் திகதி கொழும்பில் அமெரிக்கத் தூதர் அலெய்னா பிரெப்லிட்ஸ் அம்மையார் சம்பந்தனின் வீட்டுக்குச் சென்று, சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் விரிவான – நீண்டநேர – பேச்சில் ஈடுபட்டார். அந்தப் பேச்சின் இடையே இவ்விடயங்களில் இந்தியாவுடன் சேர்ந்து அமெரிக்கா நேரடியாக சம்பந்தப்படப் போகின்றது என்று அவர் கோடி காட்டினார். அதனை சம்பந்தனும் சுமந்திரனும் மட்டுமே புரிந்து கொண்டனர். அதற்கு, அமெரிக்க தூதுவரின் நுனி நாக்கு ஆங்கில உச்சரிப்புக் காரணமாக இருந்திருக்கலாம்.

எனினும் அந்தச் சந்திப்புக்குப் பின்னர் தொடராகப் பல காய்நகர்த்தல்கள் முன்னெடுக்கப்பட்டன.

அவை பற்றிய விவரத்தை நேற்றுதான் சுமந்திரன் மூலம் மாவை சேனாதிராஜாவிற்கு கோடி காட்டினார் சம்பந்தன் என்றும் அறிய வந்தது. நேற்றுப் பகல் மாவை சேனாதிராசாவின் தெல்லிப்பளை இல்லத்தில் மாவை – சுமந்திரன் சந்திப்பு வெகு சுமுகமாக இடம்பெற்றது. அப்போதே விடயங்களை மாவைக்கு விவரமாகத் தெரிவித்தார் சுமந்திரன்.

இதற்கிடையில் அமெரிக்க தூதுவர் – கூட்டமைப்பினர் சந்திப்பு சம்பந்தன் வீட்டில் ஜூலை 16ஆம் திகதி நடைபெற்று, சுமார் ஒரு மாதத்தின் பின்னர், ஓகஸ்ட் 15ஆம் திகதி சுமந்திரனையும் புதிய வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி எல் பீரிஸையும் தமது கொழும்பு இல்லத்துக்கு அழைத்துப் பேசினார் கொழும்புக்கான அமெரிக்க தூதுவர் ரெப்லிட்ஸ் அம்மையார். அப்போது, இப்படி கூட்டமைப்புடன் தமிழர் பிரச்சினை குறித்து அமெரிக்கா நேரடியாக 'டீல்' பண்ணப் போகின்றது என்ற செய்தி அமைச்சர் பீரிஸுக்குக் கோடி கட்டப்பட்டது என்பதையும் ஊர்ஜிதப்படுத்த முடிந்தது.

அப்போது தொடக்கம் இந்த விடயத்தை ஒட்டிக் கொழும்பு சினக்கத் தொடங்கிவிட்டது என்று கூறப்படுகின்றது. அதேசமயம் இந்தியாவையும் அமெரிக்காவையும் கையில் போட்டுச் சமாளிக்கும் எத்தனமும் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. அதானி குழுமத் தலைவர் இலங்கை வந்தமை வரை பல இந்திய நட்புறவு விடயங்களும் மளமளவென்று நடந்தன.

இதே சமயம், தமிழர் தரப்பின் அரசியல் நிலைவரங்கள், அதிகாரப் பரவலாக்கல் போன்ற சட்ட விடயங்களையும் தகவல்களையும் முன்வைத்து, தந்திரோபாயத் திட்டங்களை வகுப்பதற்கு பிரதிநிதிகள் குழு ஒன்றை நியமிக்கும்படி சம்பந்தனைக் கோரியது அமெரிக்கத் தரப்பு.

பார்த்தார் சம்பந்தன். வயது மூப்புக் காரணமாக தாம் பயணம் செய்ய முடியாது, ஆங்கிலம் புரியாத அரசியல்வாதிகளை எண்ணுக் கணக்குக்கு அனுப்புவதிலும் அர்த்தமில்லை, அப்படிப் போய் வருவதற்கான விசுவாசத்திலும் அந்த அரசியல் தலைவர்கள் இல்லை என்று அவர் எண்ணினாரோ என்னவோ...!

தாம் சட்ட நிபுணர் குழு ஒன்றை அனுப்புவதாகக் கூறினார் சம்பந்தன். சுமந்திரனுடன், சட்டப் பேராசிரியர் செல்வகுமாரனயும், சந்திரஹாசனின் துணைவியார் நிர்மலா சந்திரஹாசனையும் அவர் நியமித்திருந்தார். செப்டம்பரில் மூவர் குழு வொஷிங்டன் செல்வதற்கு வசதியாக அமெரிக்க விசாவும் மூவருக்கும் வழங்கப்பட்டது. ஆனால் அந்தப் பயணம் தாமதமாகி நவம்பர் நடுப்பகுதி என்றான போது தமது கல்விப் பணி காரணமாக பேராசிரியர் செல்வகுமார் வொஷிங்டன் பயணத்தில் இணைய முடியாது என்று தெரிவித்தார். அந்த இடத்துக்குத் தமக்கு மிக நெருங்கியவரான ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரனை சம்பந்தன் நியமித்திருக்கின்றார்.

செய்தி வெளியே கசியாமல் – தமிழர் தரப்பு சட்ட நிபுணர் குழு வொஷிங்டன் சென்றடையும் வரை விடயம் அம்பலமாகாமல் – இருப்பதையே அமெரிக்கத் தரப்பு விரும்பியது.

ஆனால், விவகாரத்தை குழப்புவதற்காக செய்தியை கொழும்பே கசியவிட்டு, அம்பலப்படுத்தி, இராஜதந்திரக் குழப்பத்தை ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிகின்றது. கொழும்பின் முக்கிய ஊடகவியலாளர் ஒருவரே நேற்று முன்தினம் இரவு இந்த செய்தியை – தகவலை – விவரங்களை – என்னைத் தேடிப் பிடித்து உறுதிப்படுத்திக் கூறினார்.

எங்களுக்கு ஓர் ஈர் கிடைத்தால் போதும், ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாள் ஆக்குவோம் என்று நான் கூறுவது உண்டு.

அந்த தென்னிலங்கை ஊடக வட்டாரத்தின் தகவலை நேற்று முன்தினம் இரவே உறுதிப்படுத்தி விட்டேனாயினும், மேலும் சில விடயங்களை உறுதிப்படுத்துவதற்குக் காத்திருக்க வேண்டியிருந்தது. அதனால்தான் இந்த விடயத்தை ஒரு நாள் சஸ்பெண்டில் நான் வைக்க வேண்டியதாயிற்று.

எது, எப்படி என்றாலும், இனிமேல் இலங்கைத் தமிழர் விடயத்தை அமெரிக்க – இந்தியக் கூட்டுத் தரப்புக்கள் நகர்த்தும் என்பது தமிழருக்கு மிகச் சாதகமான ஒன்றுதான்.

– மின்னல் –

## வாள்வெட்டு வன்முறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.நாவாந்துறைப் பகுதியில் அண்மையில் 14 வயது சிறுவன் மீது 10 பேர் கொண்ட அணி ஒன்று வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டது. அதில் அச்சிறுவன் காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். இது தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் சம்பவத்துடன் தொடர்புபட்டனர் என்று முறையிடப்பட்ட 10 பேரையும் நேற்றுமுன்தினம் கைதுசெய்தனர். இதில் கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும் சிறுவர்கள் என்ற அதிர்ச்சிச் செய்தியை பொலிஸார் வெளியிட்டதுடன் அவர்கள் அனைவரும் 14 தொடக்கம் 17 வயதுக் குட்பட்டவர்கள் எனவும், அவர்கள் யாழ். நகரம், நாவாந்துறை, அத்தியடி, நல்லூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும், கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து வாள், கைக்கோடாரி என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழில் இளைஞர்களின் அடாவடி மற்றும் வாள்வெட்டு வன்முறைகள் கட்டுப்பாடு இன்றி நடைபெற்றுவரும் நிலையில் சிறுவர்கள் கூரிய ஆயுதங்களை உடைமையில் வைத்து குழுவாக இணைந்து இப்படிப்பட்ட வாள்வெட்டு வன்முறையில் ஈடுபட்டமையானது பொலிஸார் மற்றும் பொதுமக்கள் மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த கைது நடவடிக்கைகள் யாழ். குற்றத் தடுப்புப் பிரிவு பதில் பொறுப்பதிகாரி குமாரபேலி தலைமையில் பொலிஸ் உத்தியோகத்தர்களான விஜயகாந்த், கபில்தாஸ், செனரத்னா, கஜன் போன்றவர்களால் மேற்கொள்ளப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட சிறுவர்கள் அனைவரும் சிறுவர் நீதிமன்றில் முற்படுத்தப் படவுள்ளனர்.

## 12 மாவட்டங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேதமடைந்துள்ளன.

நாட்டில் சீரற்ற காலநிலையால் 4 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

அடை மழையால் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு மற்றும் மின்னல் தாக்கத்தாலேயே மேற்படி உயிரிழப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

## ஈஸ்டர் தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்குப் பின்னர், சதிகாரர்கள் பல்வேறு சதித்திட்டங்களைத் ஆரம்பித்து, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்.

தாக்குதல் நடத்தப்பட்ட தேவாலயங்களை உடனடியாகப் புனரமைக்க நல்லாட்சியில் நாம் நடவடிக்கை எடுத்திருந்தோம்.

தாக்குதலுக்குக் காரணமானவர்கள் குறித்து விசாரணை நடத்தி குற்றவாளிகள் கைதுசெய்து கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்.

எனினும், அரசு அவ்வாறு செய்யாமல் பல்வேறு சதிகளை மேற்கொண்டு வருகின்றது.

எமக்கும் புலனாய்வுப் பிரிவின் பிரதானிக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை. அவர்களின் ஆலோசனைகளை ஏற்று அரசியலில் ஈடுபடும் பழக்கம் எமக்கு இல்லை.

இந்தத் தாக்குதலின் உண்மை நிலைமையை நாட்டுக்கு வெளிப்படுத்தும் வரை இது தொடர்பில் திருப்தியடைய முடியாது.

தாக்குதலில் பலியானவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமானால் இந்தத் தாக்குதலுக்கு மூலகாரணமாகச் செயற்பட்டவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். அதற்காக ஐக்கிய மக்கள் சக்தி நிபந்தனைகள் இன்றி முன்வரும் –என்றார்.

## சுகாதார வழிகாட்டலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்பதால் அடுத்து வரும் வார இறுதி நாள்களில் உல்லாசப் பயணங்களில் மற்றும் ஏனைய பயணங்களில் ஈடுபடுவதற்குச் சிலர் ஏற்கனவே திட்டமிட்டிருக்கின்றனர்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களினால் வைரஸ் பரவும் அபாயம் அதிகம் உள்ளது.

இது போன்ற தேவையற்ற அபாயங்களை மக்கள் முடிந்தவரை தவிர்க்க வேண்டும்.

இவ்வார இறுதி நாட்களில் தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு பொதுமக்களை கேட்டுக்கொள்கின்றோம்.

எவரேனும் தவிர்க்க முடியாத காரணங்களுக்காகப் பயணத்தில் ஈடுபடுபவர்கள் சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிப்பது முக்கியம் – என்றார்.




# வலிகாமம் வடக்கு காணிகள் நிச்சயம் விடுவிக்கப்படும்!

## அமைச்சர் டக்ளஸ் உத்தரவாதம்



வலி வடக்கில் உள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளேன் எனவும் அவற்றை விடுவிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றேன் எனவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

உள்ளூரில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வசிக்கும் காணிகளற்ற குடும்பங்களுக்கு அரச நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட காணிகளுக்கான உறுதிகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய கடற்றொழில் அமைச்சர் -

வலி வடக்கில் மக்களுடைய சுமார் 3ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ள நிலையில் அது தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியுடன் பேசினேன். அவர் படிப்படியாக விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவித்தார்.

அதுமட்டுமல்லாது நிரந்தர நியமனம் கிடைக்காத வடக்கு சுகாதாரத் தொண்டர்களின் நிரந்தர நியமனம் தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசினேன்.

சுகாதாரத் தொண்டர்களின் நிரந்தர நியமனத்துக்கு தெரிவுகளில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன எனப் பாதிக்கப்பட்டவர்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

எனவே பாராபட்சமற்ற முறையில் வெளிப்படைத்தன்மையுடன் மீண்டும் நேர்முகத் தேர்வுகளை நடத்தி மீண்டும் நிரந்தர நியமனங்களை வழங்குவது தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடினேன். அவர் அதனை ஏற்றுக்கொண்டுள்ளார்.

இவ்வாறு, ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் ஒத்துழைப்புடன் மக்களுக்குத் தேவையான அனைத்துச் செயற்பாடுகளையும் முன்னெடுக்கத் தயாராக இருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

**Jaffna College Institute of Technology**
**Calls for the following courses**

**Computer Certificate Courses** *( 3 – 4 months Part time)*

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

## பயணப் பையில் இருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்பு

சப்புகஸ்கந்த, மாபிம பகுதியில் இருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பயணப்பை ஒன்றில் இருந்து குறித்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.






நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# கிழட்டுப் புலி சம்பந்தன்

அரசியலில் ஜே.ஆர்.ஜெயவர்தனவை 'கிழட்டு நரி' (Old Fox) என்பார்கள். அப்படிப் பார்த்தால் சம்பந்தனை 'கிழட்டுப் புலி' எனலாம். அவரது அரசியல் காய்நகர்த்தல்கள் அத்தகைய கருத்து நிலைப்பாட்டைத்தான் தந்திருக்கின்றன.

இன்று, இப்போது கட்டவிழும் விடயங்களை ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னரே சம்பந்தன் எதிர்வு கூறினார் என்பதுதான் அந்த அரசியல் கிழட்டுப் புலியின் திறமைக்கு சான்று எனலாம்.

2012 மே மாதம் 27 ஆம் திகதி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியை மட்டக்களப்பில் நடந்த கட்சியின் 14 ஆவது தேசிய மாநாட்டின் போது இரண்டாவது தடவையாக பொறுப்பேற்று தாம் ஆற்றிய தலைமை உரையில் இப்போது கட்டவிழக்கூடிய நிலைமை பற்றிய எதிர்வுகூறலை அவர் வெளிப்படுத்தியிருந்தார். அது வருமாறு:–

"இந்தப் பூலோகம் நீதியின் அச்சாணியில் சுழல்வதில்லை; அடக்கப்பட்ட தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள் எல்லாம் நியாயத் தராசில் வைத்து நிறுக்கப்படுவதுமில்லை; ஜனநாயகத்தைப் பற்றியும், மனித உரிமைகளைப் பற்றியும் பறைசாற்றுகின்ற உலகப் பெரும் சக்திகள் எல்லோரும் நீதி தேவர்களும் அல்லர். அனைத்துலக வல்லரசுகளும் அவற்றைச் சார்ந்து இயங்கும் சக்திமிக்க உலக நிறுவனங்களும் – ஏதோ தமது நலன்களை எல்லாம் பணயம் வைத்துவிட்டு எமக்காக இரங்கி வந்து, எமது உரிமைகளைப் பெற்றுத் தரப் போகின்றன என்றும் நாங்கள் நம்பவில்லை. இருந்த போதும் – அண்மைக் காலங்களில் மோசமான மனித உரிமை மீறல்களை அனைத்துலக சமூகம் வெறுமனே கைகட்டி மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கவில்லை என்பதும், நாங்கள் யதார்த்தத்தில் தொடர்ந்து அவதானித்துவரும் உண்மை தான். அதனால், தமது தேசிய நலன்களை அடிப்படையாக வைத்து அவர்கள் நிகழ்த்தும் சதுரங்க ஆட்டத் தின் ஏதோ ஒரு பகுதியாக, அவர்களது மனிதாபிமான உள்ளுணர்விற்கும் தேச நலன் சார்ந்த முனைப்பிற்கும் இடையிலிருக்கும் ஒரு புள்ளியில், எமது நலன்களும் பாதுகாக்கப்படலாம். அதற்கு உகந்த சூழலை நாம்தான் பேண வேண்டும். கனிந்துவரும் சூழலைக் குழப்பாமல், அனைத்துலக சமூகத்தை அசௌகரியப் படுத்தாமல், நிலைமையை நாங்கள் பக்குவமாகக் கையாள வேண்டும்.

"அதற்காக – நாம் பொறுமை காக்க வேண்டும்."

"எண்பதுகளின் நடுப் பகுதியில் இந்தியத் தலையீடு நிகழ்ந்த போது இருந்த உலகச் செல்நெறி இப்போது மாறிவிட்டது. இப்போது – ஆடுகளம் பழையதானாலும், அதைச் சூழ நிகழ்ந்துவிட்ட மாற்றங்கள் புதியவை. ஆட்டம் பழையதானாலும், அதன் தந்திரோபாயங்கள் புதியவை; இலக்குகள் பழையவைதான் என்றாலும், அவற்றை அடைவதற்கான மூலோபாயங்கள் புதியவை; ஆட்டக்காரர்கள் பழையவர்கள்தான் எனினும், அவர்கள் சேர்ந்திருக்கும் அணிகள் புதியவை. தமிழர்களுக்கும் அப் படித்தான் – இலட்சியம் பழையதே ஆனாலும், இனி நாங்கள் கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகள் முற்றிலும் புதியவை. முன்பொரு காலம், அமெரிக்கா, இந்தியாவிற்கு எதிரான பக்கத்தில் இருந்தது. ஆனால், இன்று எமக்குச் சாதகமாகக் கனிந்து வந்துள்ள சூழலில் இந்தியாவும் அமெரிக்காவும் ஏறக்குறைய ஒரே பக்கத்தில் இருக்கின்றன. ஆனால், ஸ்ரீலங்கா அரசாங்கமோ, இவர்களுக்கு மாறான பக்கத்தில் இருப்பவர்களுடன் நட்புறவைத் தொடர்ந்தும் வளர்த்துச் செல்கின்றது. சிறீலங்கா அரசாங்கத்தை வளைத்து வியூகமிட்டு, ஐ.நா. மனித உரிமைகள் மன்றத்தில் அண்மையில் அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணையை ஆதரித்து இந்தியா வாக்களித்தமை, எமக்குச் சாதகமாக அரங்கேறிய ஓர் அற்புதமான உலக நிகழ்வு. அதனை, எதிர்கால அரங்கேற்றங்களுக்கான ஓர் எதிர்வுகூறல் என்றே கருத வேண்டும். ஆளணிகள், அம்பு வில்லுகளுடன் சாதிக்க முடியாது போன ஒப்பற்ற உயரிய காரியங்களைக் கூட – உயிரழிவு ஏதுமின்றிச் சாதிக்கும் மகத்தான வாய்ப்பை இந்தப் புதிய ஆட்ட ஒழுங்கு எமக்குப் பெற்றுத் தரலாம். அதனால் தான் – நாம் பொறுமை காக்கவேண்டும்."

– இது சம்பந்தன் அன்று பேசியவை. இன்று அதற்குப் பொருந்துமாற்போல காரியங்கள் நடக்கின்றன. அந்தத் தீர்க்க தரிசனத்தைக் கூறிய சம்பந்தன் அரசியலில் கிழட்டு புலி தான்!

# விபத்தில் காயமடைந்த பொலிஸ் அதிகாரி சாவு

முந்தல் பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவத்தில் காயமடைந்த நிலையில் சிலாபம் வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த முந்தல் பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி கடந்த புதன்கிழமை உயிரிழந்துள்ளார்.

முந்தல் பொலிஸ் நிலையத்தில் போக்குவரத்து பொறுப்பதிகாரியாகக் கடமைபுரிந்து வந்த பல்லம பகுதியைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி டபிள்யூ. எம். ஆர். பண்டார என்பவரே இந்த விபத்தில் உயிரிழந்துள் ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று, குறித்த போக்குவரத்து பொறுப்பதிகாரி கடமை நிமித்தம் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக வீதியைக் கடக்க முற்பட்ட போது, சிலாபத்திலிருந்து புத்தளம் பகுதி நோக்கிச் பயணித்த பட்டா லொறியொன்று பொறுப்பதிகாரி மீது மோதியுள்ளது.

அதனையடுத்து, புத்தளத்திலிருந்து சிலாபம் நோக்கிப் பயணம் செய்த மற்றுமொரு சொகுசு கார் ஒன்றும் அதே சமயம் பொறுப்பதிகாரி மீது மோதியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரண்டு வாகனங்களும் இவ்வாறு ஒரே சந்தர்ப்பத்தில் மோதியதில் படுகாயமடைந்த போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரியை அங்கிருந்தவர்கள் உடனடியாக சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர்.

இவ்வாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குறித்த போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரிக்கு இரண்டு நாள்கள் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்ட போதிலும் அவர் புதன்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய இரு வாகனங்களும் முந்தல் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையுடன், குறித்த வாகன சாரதிகளும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் தலைமையக பொலிஸாரும், முந்தல் பொலிஸாரும் இணைந்து விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வவுனியாவில் இளைஞன் ஒருவர் விசேட அதிரடிப் படையால் கைது



வவுனியா, தவசிகுளம் பகுதியில் இளைஞர் ஒருவர் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு, தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வவுனியா, தவசிகுளம் பகுதியில் நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை திடீர் சோதனை நடவடிக்கை ஒன்றை விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட போது ஒரு கிலோ 600 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது. இதனையடுத்து இதனை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் அப் பகுதியைச் சேர்ந்த 26 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட கேரளா கஞ்சா மற்றும் கைது செய்யப்பட்ட இளைஞர் ஆகியோரை விசேட அதிரடிப் படையினர் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். வவுனியா பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளமையுடன், விசாரணைகளின் பின் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. 100

# அத்தியாவசியப் பொருள்களின் கட்டுப்பாட்டு விலையை நீக்கும் வர்த்தமானி வெளியீடு!

அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் கட்டுப்பாட்டு விலையை நீக்கும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கு அமைய சீனி, பருப்பு, கோழி இறைச்சி, செமன், சோளம், பெரிய வெங்காயம், கோதுமை மா, உருளைக்கிழங்கு மற்றும் பால்மா உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் கட்டுப்பாட்டு விலைகள் நீக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் வெளியிடப்பட்ட 7 வர்த்தமானி அறிவித்தல்கள் இந்த விசேட வர்த்தமானி அறிவிப்பின் ஊடாக ரத்து செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில், கடந்த செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி வெள்ளை மற்றும் சிவப்பு சீனிக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விலையும் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2021

"ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நாட்ட வேண்டும்."

– அலெக்சாண்டர் சிமித் (ஸ்கொட்லாந்துக் கவிஞர்)



# மதுபானப் போத்தல்களுடன் பெண் ஒருவர் கைதாகினார்



திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவில் உள்ள சேனையூர் பகுதியில் உள்ள வீடொன்றில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்டு வந்த சாராயம், பியர் போத்தல்களுடன் பெண்ணொருவரை சம்பூர் பொலிஸார் கடந்த புதன்கிழமை இரவு அவரின் வீட்டில் வைத்து கைது செய்துள்ளனர்.

இதன்போது பியர் போத்தல்கள் 66, பியர் டின் 49, சீல் சாராயம் 11 போத்தல்கள் என்பவற்றுடன் 36 வயதுடைய பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பூர் - சேனையூர் பகுதியில் சட்டவிரோதமாக சாராயம் மற்றும் பியர்கள் விற்பனை செய்யப்படுகின்றன என சம்பூர் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த வீட்டை பொலிஸார் முற்றுகையிட்டு சோதனைக்கு உட்படுத்தியபோது சட்டவிரோத மது பானங்களுடன் வீட்டில் இருந்த பெண் கைது செய்யப்பட்டார் என சம்பூர் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்ட பெண் சம்பூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையுடன் இவரை மூதூர் நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்துவதற்கான ஏற்பாடுகளை சம்பூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

மழையுடன் கூடிய வானிலை காரணமாக நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் விசேட வைத்திய நிபுணர் ஷிரந்தி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

நாளாந்தம் 30 டெங்கு நோயாளர்கள் பதிவாகி வருகின்றனர். அதிலும் மேல் மாகாணத்திலேயே அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இது மொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் 68 வீதம் ஆகும்.

மேலும், கண்டி, காலி, மாத்தறை, குருநாகல், பதுளை, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களிலும் அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக கொவிட் தொற்றுடன் டெங்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாத போதிலும், டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கு முன், பாடசாலை சூழலை சுத்தம் செய்யுமாறு சுகாதார அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளேன் எனவும் விசேட வைத்திய நிபுணர் ஷிரந்தி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, டெங்கு நோயால் இவ்வருடம் 10 பேர் உயிரிழந்துள்ளமையுடன், இந்த வருடத்தில் இதுவரை 21 ஆயிரத்து 646 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

# வெலிகம பகுதியில் வெடிப்பு சம்பவம்

வெலிகம, கப்பரதொட்ட பகுதியில் உள்ள சிற்றூண்டிச்சாலை ஒன்றில் வெடிப்பு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் இருவர் காயமடைந்து மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிற்றூண்டிச்சாலையின் எரிபொருள் சிலிண்டர் வெடித்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# ஒரு கோடியே 35 லட்சத்துக்கும் மேற்பட்டோர் தடுப்பூசி பெற்றனர்

*கொரோனாத் தடுப்பூசி வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கையில் ஒரு கோடியே 35 லட்சத்து ஆயிரத்து 175 பேருக்கு முழுமையாக தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.*

*கடந்த புதன்கிழமை மேலும் 21 ஆயிரத்து 653 பேருக்கு கொரோனாத் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.*

*இதேவேளை, புதன்கிழமை 6 ஆயிரத்து 320 பேருக்கு மூன்றாவது டோஸா கபைசர் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.*

*அதன்படி, நாட்டில் இதுவரையிலும் 9 ஆயிரத்து 107 பேர் கொரோனாத் தடுப்பூசியின் மூன்றாவது டோஸை பெற்றுள்ளனர்.*





- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 182

**460.நடந்தது இனப்படுகொலை எனத் தீர்ப்பாயம் சட்டரீதியாக ஆராய்ந்ததா?**

தீர்ப்பாயத்தின் நடுவர்களின் பின்னணியில் அவர்கள் இனப்படுகொலையை, அது பொதுவெளியில் பேசப்படும், கையாளப்படும் அர்த்தத்தில் ஆராயவில்லை என்பது தெளிவு.

ஐ.நாவின் இனப்படுகொலை சாசனத்தில் குறிப்பிடப்பட்ட அங்கங்களில் விவரிக்கப்பட்ட நடவடிக்கைகள், செயற்பாடுகள் நடந்தனவா என்று சாட்சியங்களின் அடிப்படைகளில் ஆராய்ந்தது தீர்ப்பாயம். 2009 ஆம் ஆண்டு போரின் முடிவில் மக்கள் அடைந்த மன அதிர்ச்சிகள், உணர்வுகள் எவ்வளவு உளவியல் பாதிப்பை தந்தன என்பதை நேரடியாக தெரிவிக்கப்பட்ட சாட்சியங்களிலிருந்தும், நடத்தப்பட்ட ஆய்வுகளின் முடிவுகளிலிருந்தும் ஆராய்வு செய்தது. மக்கள் அடைந்த மன அதிர்ச்சிகள்,உளைவுகள்,உளவியல் பாதிப்புக்கள் யுத்தங்களின் பின் கொசொவா, ஆப்கானிஸ்தான் மக்களும் அடைந்தவைக்கு சமனாக இருந்தன எனக் கருதினார்கள். யுத்த காலங்களில் இப்படியான உளவியல் பாதிப்புகள் பலமாக இருந்தாலும் யுத்த முடிவின் பின்பும் அது பல வழிகளில் தொடர்வதை அவதானித்துச் சுட்டிக்காட்டினார்கள்.

**461.இனப் படுகொலைக்கான நோக்கம் தெளிவாகவே இருந்தது என தீர்மானித்தார்களா?**

இனப் படுகொலைதான் நடத்தப்பட்டது என்று சட்டரீதியாக ஆதாரங்களின் அடிப்படையில் நிறுவ அவை போதுமானவையாகவோ சுதந்திரமானவையாகவோ



இல்லை என்ற கருத்துகளில் தமிழ் மக்களிடையே அரசி யல் நடத்தப்பட்டது.

ஓர் அரசியல் பகுதி, இனப்படுகொலை என நிறு வப்பட்டு, அதன் அடிப்படையில் சுயநிர்ணய உரிமையை ஆதாரப்படுத்தி, அதில்தான் அவர்களது அபிலாஷையான அரசியல் தீர்வைக் காணலாம் என மக்களுக்கு பரப்புரை செய்கிறார்கள். இன்னுமொரு அரசியல் பகுதி இனப்படுகொலை என சட்டரீதியாக நிறுவுவதற்கு சாட்சியங்கள் போதுமானவையாக இல்லை எனக் கால்களைக் கட்டி வைத்துக்கொண்டே அரசியலில் நடைபோடுகிறது. இவற்றினால் "இனக்கொலைக்கான தெளிவான நோக்கம்" என்ற சட்ட கூற்றை எவ்வாறு தீர்ப்பாயம் அணுகித் தீர்மானத்துக்கு வந்தது என்பதை விளக்கங்களுக்காக சிறிது விரிவாகவே சொல்கிறேன். மக்கள் இந்த அரசியல்களை புரிந்து கொள்ள வேண்டும்.

**462.இனப்படுகொலைக்கான நோக்கம் பற்றிய தீர்ப்பாயம் என்ன அபிப்பிராயம் தந்தது?**

ஒரு குறிப்பிட்ட இனத்தையோ குழுமத்தையோ இனப்படுகொலையால் அழித்தது என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால் அதற்கான குறிப்பிட்ட நோக்கம் (Specific Intention) இருந்தது என்பது நிரூபணப்படுத்தப்பட வேண்டும் என்பதை இனப்படுகொலை சாசனம் வற்புறுத்துகிறது.

இனப்படுகொலை குற்றச்சாட்டிலிருந்து விடுபடுவதற்காக வழமையாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் அதற்கான நோக்கத்தி ற்கான சாட்சியங்கள் இல்லை, இருந்தாலும் அவை போதாது, இப்படியான நோக்கத்தை அவை ஊர்ஜிதம் செய்வதில்லை என வாதாடுவது வழமை. ஆகவே இதனை எப்பொழுதுமே நேரடி சாட்சியங்களால் ஆதாரப்படுத்த முடிவதில்லை.



அப்படியான வாதங்களை நிராகரித்து பல சர்வதேச குற்றவியல் மன்றுகள் (International Criminal Tribunals) இந்த குறிப்பிட்ட நோக்கத்திற்கு நேரடி சாட்சியங்கள் கொண்டு ஆதாரப்படுத்த முடியாவிட்டால், அவை பல சூழ்நிலை சாட்சியங்களால் (Circumstantial evidence) நிரூபிக்கப்படலாம் என ஏற்றுக் கொண்டுள் ளன என்பதை மேற்கோள் காட்டி தீர்ப்பாயம் நேரடி சாட்சியங்களையும் சூழ்நிலை சாட்சியங்களையும் ஆராய்ந்தது. தொடர்ச்சியாக ஒரு இனக்குழுவுக்கு செய்யப்பட்ட அனர்த்தங்கள், அக்கிரமங்கள், அவற்றினது தன்மைகள், தீவிரம், பாதிக்கப்பட்டவர்கள் அந்தக் குழுமத்தின் அங்கத்தினர் என்பதற்காகவே அவர்கள் பாதிக்கப்பட்டமை, பழி வாங்கப்படுவது என்பவை இப் படியான சூழ்நிலைச் சாட்சியங்களுக்குள் அடங்கும் என பல முன்னைய மன்றங்கள் விசாரிக்கப்பட்ட வழக்குகளில் ஏற்றுக்கொண்டுள்ளன.

ஓர் இனப்படுகொலையின் குறிப்பிட்ட நோக்கத்தை அப்படியான சூழ்நிலை சாட்சியங்கள் நிரூபிக்கலாம் என பல சர்வதேச மன்றுகள் ஏற்றுக்கொண்டமையை மேற்கோள் காட்டி, தீர்ப்பாயம் அவற்றுக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட சாட்சியங்களையும் குறிப்பிட்டது.

பொதுவாகவும் பரவலாகவும் அந்த குழுமத்திற்கு எதிராக நடத்தப்படும் அட்டூழியங்கள், அந்த நடவடிக்கைகளுக்கு ஆதாரமும் உந்துதல்களும் தரும் அரசியல் சித்தாந்தங்கள், மிகவும் நேர்த்தியாகக் கொலைகள் திட்டமிடப்பட்டு ஏற்பாடு செய்யப்படுவது, அவற்றை நடத்தி சடலங்களை மறைப்பது, நடத்தப்படும் பாகுபாடுகள், இந்தப் பாகுபாட்டிற்காக அவற்றை நடத்துபவரின் எண்ணப்பாங்கு என்பவை மூலம் அந்த குறிப்பிட்ட நோக்கம் கிரகிக்கப்படலாம். அல்லது உணர்த்தப்படலாம் என்பதை தீர்ப்பாயம் முன்னைய வழக்குகளில் இருந்து ஆதாரப்படுத்தியது.

வெளிப்படையாகவே முள்ளிவாய்க்கால் அட்டூழியங்களுக்கு முன்னும், அவை நடத்தப்பட்ட போதும், அதன் பின்னரும் அதை நடத்தியவர்களின் கருத்துக்கள், பேச்சுக்கள், அறிக்கைகள் அப்படியான இனப்படுகொலைக்கான குறிப்பிட்ட நோக்கத்தை தெளிவாக ஆதாரப்படுத்துகின்றன என அபிப்பிராயம் தெரிவித்த தீர்ப்பாயம் அதற்கு ஆதாரமான நேரடிச் சாட்சியங்களை சுட்டிக் காட்டியுள்ளது.

இனப்படுகொலையின் அங்கமாக, அதன் தொடர்பாக தமிழ் மக்களின் காணிகள், இருப்பிடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டமை, மக்களுக்குத் தரப்பட்ட சித்திரவதைகள், அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் கையடக்கப்பட்டவை, அவர்கள் கொல்லப்பட்டமை, ஜுன் 1956 இல் நடத்தப்பட்ட இங்கினியாகல படுகொலையிலிருந்து ஜுன் 2008 இல் நடந்த புதுக்குடியிருப்பு குண்டு வீச்சுக்கள் (இவற்றில் குறைந்தது 10,617 பேராவது இறந்தனர்), அதை தொடர்ந்து நடந்த எல்லாவற்றையும் பட்டியலிட்டு நேரடிச் சாட்சியங்களாக ஏற்றுக்கொண்டது.

அதேபோல் கொலை செய்யப்பட்ட 39 ஊடகவியலாளர்களின் கொலைகளின் பின்னணிகளை ஆராய்ந்ததில் அவர்களில் 35 பேர் ஸ்ரீலங்கா இராணுவத்தினராலும் அவர்களோடு இணைந்து இயங்கிய துணை குழுக்களாலும் செய்யப்பட்டனர் எனவும் அதில் 89.7 வீதத்தினர் தமிழ் மக்கள், அவர்கள் தமிழர்கள் என்பதாலேயே கொல்லப்பட்டார்கள் என ஏற்றுக்கொண்டது.

இவை போக, சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இன்று வரை தமிழ் மக்களுக்கு எதிரான அப்படியான



இனப்படுகொலையின் குறிப்பிட்ட நோக்கம் இருந்ததாகவும், அந்த நோக்கங்கள் பல தடவைகள் அனுபவம் மிகுந்த சமுதாய, அரசியல், இராணுவ அதிகாரிகளாலும், ஊடகங்களாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என அவை பற்றிய சிலவற்றையும் மேற்கோள் காட்டி ஆதாரப்படுத் தியது.

(வளரும்)



# ஆஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் தமிழ் எழுத்தாளர் விழா 12 ஆம் திகதி ஆரம்பம்

**(முருகபூபதி)**

ஆஸ்திரேலியாவில் தமிழ் கலை, இலக்கிய முயற்சிகளை மதிப்பீடு செய்யும்போது அவற்றுக்கான ஊற்றுக் கண் திறந்து மூன்று தசாப்தங்களுக்கு மேலாகியிருப்பதையும் அவதானிக்கமுடிகிறது. தமது தாயகத்தில் கலை, இலக்கிய, ஊடகத்துறைகளில் ஈடுபட்டவர்கள் புகலிடம் நாடி இங்கு வந்த பின்னரும் உள்ளார்ந்த ஆற்றல்கள் வற்றிப்போகாமல் இயங்கியமையால் தமிழ் கலை, இலக்கிய படைப்புலகத்தில் ஆஸ்திரேலியாவின் பங்களிப்பும் குறிப்பிடத்தகுந்ததாக விளங்குகிறது.

ஆஸ்திரேலியாவில் தமிழ் கலை, இலக்கியம், இதழியல், வானொலி, தொலைக்காட்சி முதலானவற்றை மதிப்பீட்டிற்குட்படுத்தும்போதுதான் புலம்பெயர் இலக்கியம் இங்கும் உலகளவிலும் எவ்வாறு பேசுபொருளானது என்பதையும் அறியமுடியும்.

இந்தியாவிலிருந்து ஒரு காலத்தில் இலங்கைக்கும் பிஜி மற்றும் ஆபிரிக்காவிற்கும் தமிழர்கள் புலம்பெயர்ந்து சென்றிருந்தாலும், இலங்கையிலிருந்து தொழில் நிமித்தமும் கல்வியின் பொருட்டும் ஏராளமானோர் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தாலும், 1983 இல் இலங்கையில் இனவாத வன்செயல் வெடித்ததன் காரணமாகத் தமிழர்களில் நிகழ்ந்த பாரிய புலப்பெயர்வின் பின்னர்தான் அவர்கள் மத்தியிலிருந்த கலை, இலக்கிய வாதிகளின் இயக்கத்தால் புலம்பெயர்ந்தோர் இலக்கியம் பேசுபொருளானது.

இந்த வரலாற்றுப் பின்னணியில் ஆஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம் கடந்த இரண்டு தசாப்த காலமாக முன்னெடுத்துவரும் தமிழ் எழுத்தாளர் விழா இயக்கம், சமகால கொரோனா பெருந்தொற்றால், சமூக இடைவெளியை பேணி முதல் தடவையாக மெய் நிகரில் இம்முறை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டு முதல் தடவையாக மெல்பனில் தமிழ் எழுத்தாளர் விழா அடுத்தடுத்து இரண்டு நாள்கள் நடைபெற்றன. முதல்நாள் பிரஸ்டன் நகர மண்டபத்தினுள்ளும், இரண்டாம்நாள் மெல்பன் பண்டுரா பூங்காவில் திறந்த அரங்கிலும் நடைபெற்றன.

2002 ஆம் ஆண்டு சிட்னியிலும், மீண்டும் 2003 ஆம் ஆண்டு மெல்பனிலும் அதனையடுத்து 2004 ஆம் ஆண்டு கன்பராவிலும் தொடர்ச்சியாக நடைபெற்ற இந்த விழா 2005 ஆம் ஆண்டில் பலரதும் வேண்டுகோளையடுத்து விக்ரோரியா மாநிலத்தில் பதிவுசெய்யப்பட்ட அமைப்பாக ஆஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கமாக இயங்கத் தொடங்கி, தங்கு தடையின்றி வருடந்தோறும் இந்த விழா நடைபெற்று வருகிறது.

தொடர்ந்தும் மெல்பன், சிட்னி, மற்றும் குவின்ஸ்லாந்தில் கோல்ட் கோஸ்டிலும் இவ்விழாவை நடத்திய இந்தச் சங்கம், காலத்துக்குக் காலம் கலை , இலக்கிய சந்திப்புகளையும் கருத்தரங்குகளையும் நூல் அறிமுக நிகழ்வுகளையும் வாசிப்பு அனுபவப் பகிர்வு அரங்குகளையும் அனைத்துலக பெண்கள் தின விழாவையும் நடத்தி வந்திருக்கிறது.

2020 ஆம் ஆண்டு பெருந்தொற்று தொடங்கியதையடுத்து, மெய்நிகரில் நிகழ்ச்சிகளை நடத்திவரும் இந்தச் சங்கத்தின் வருடாந்த எழுத்தாளர் விழா இம்மாதம் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆஸ்திரேலிய நேரம் இரவு 7 மணிக்கு சங்கத்தின் தலைவர் மருத்துவர் (திருமதி) வஜ்னா ரஃபீக் தலைமையில் மெய்நிகரில் ஆரம்பமாகிறது.

முதல் நாள் நிகழ்ச்சி வாசிப்பு அனுபவப் பகிர்வாகவும், இரண்டாம் நாள் நிகழ்ச்சி பன்னாட்டு கவியரங்காகவும், மூன்றாம் நாள் நிகழ்ச்சி விசேட இலக்கிய உரையரங்காகவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் வதியும் எழுத்தாளர்கள் சிலரது அண்மைக்கால வெளியீடுகள் முதல் நாள் நடைபெறும் வாசிப்பு அனுபவப்பகிர்வு நிகழ்ச்சியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. சங்கத்தின் தலைவர் மருத்துவர் (திருமதி) வஜ்னா ரஃபீக்கின் தொடக்கவுரையையடுத்து எழுத்தாளர் முருகபூபதியின் தலைமையில் வாசிப்பு அனுபவப் பகிர்வுரையரங்கம் நடைபெறும்.

நூலின் பெயர் - ஆசிரியர் - உரையாற்றுபவர் விவரம் பின்வருமாறு:

நெடு மரங்களாய் வாழ்தல் (கவிதை) - ஆழியாள் மதுபாஷினி. உரை:திருமதி ஜெ. ஹறோசனா (இலங்கை)

சமாதானத்தின் கதை - ஜேகே. (சிறுகதை) - உரை: பாத்திமா மாஜீதா (இங்கிலாந்து)

கண்டிச்சீமை - மாத்தளை சோமு (நாவல்) - உரை: திருமதி சாந்தி சிவகுமார் (மெல்பன்)

அமீலா - தெய்வீகன் (சிறுகதை) - உரை: மருத்துவர் எம். நளீமுடீன் ( மெல்பன் )

கானல் தேசம் (நாவல் ) நொயல் நடேசன் - உரை: திரு. பார்த்தீபன் (பிறிஸ்பேர்ண்)

கள்ளக்கணக்கு (சிறுகதை) பேராசிரியர் ஆசி. கந்தராஜா உரை: திருமதி ரஞ்ஜனி சுப்ரமணியம் (இலங்கை)

நினைவழியா நாள்கள் ( கவிதை ) ஜெயராம சர்மா - உரை: கலாநிதி ஸ்ரீ கௌரி சங்கர் ( மெல்பன்)

சத்தியம் மீறியபோது (சிறுகதை) வி. எஸ். கணநாதன் உரை: டொக்டர் நொயல் நடேசன் (மெல்பன்)

உயிர் வாசம் (நாவல்) தாமரைச்செல்வி - உரை: கானா. பிரபா (சிட்னி)

குறிப்பிட்ட நூல்களின் வாசிப்பு அனுபவ உரைகளையடுத்து இலங்கை கிளிநொச்சியிலிருந்து படைப்பிலக்கியவாதியும் ஊடகவியலாளருமான திரு. கருணாகரன் 'புலம்பெயர் இலக்கியத்தின் எதிர்காலம்' என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றுவார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி - பன்னாட்டுக்கவியரங்கம்

இரண்டாம் நாள் 13 ஆம் திகதி சனிக்கிழமை ஆஸ்திரேலியா நேரம் இரவு 7 மணிக்கு எழுத்தாளர் பாடும் மீன் சு. ஸ்ரீகந்தராசா தலைமையில் 'புதியதோர் உலகை நோக்கி....!' என்னும் தலைப்பில் நடைபெறும் பன்னாட்டுக் கவியரங்கில் இலங்கை, ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த கவிஞர்கள் பங்குபற்றுவர்.

சங்கத்தின் துணைத்தலைவர் சங்கர சுப்பிரமணியனின் தொடக்கவுரையுடன் ஆரம்பமாகும் இந்தக் கவியரங்கில் இலங்கையிலிருந்து கவிஞர்கள் செங்கதிரோன் கோபாலகிருஷ்ணன், ஏ. பீர் முகம்மது, வேலாயுதம் தினகரன், வெல்லவூர்க் கோபால், இங்கிலாந்திலிருந்து கோவிலூர் செல்வராஜன், ஜேர்மனியிலிருந்து அம்பலவன் புவனேந்திரன், டென்மார்க்கிலிருந்து முல்லை நாச்சியார், ஆஸ்திரேலியாவிலிருந்து இளமுருகனார் பாரதி, கல்லோடைக்கரன் ஆகியோர் பங்கேற்பர்.




இதனையடுத்து காப்பியக்கோ ஜின்னா செரிபுத்தீன் சிறப்புரையாற்றுவார்.

மூன்றாம் நாள் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆஸ்திரேலியா நேரம் இரவு 7 மணிக்கு எழுத்தாளர் நொயல் நடேசன் தலைமையில், சங்கத்தின் துணைத்தலைவர் ந. சுந்தரேசனின் தொடக்கவுரையுடன் ஆரம்பமாகும் சிறப்புரையரங்கில் தமிழக பிரபல எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன், நினைவும் நிஜமும் என்னும் தொனிப்பொருளில் இலக்கியத்தின் ஆதாரமும் சமகால நிகழ்வுகளும் என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றுவார்.

இவ்விழாவின் முதல்நாள், மற்றும் இறுதிநாள் நிகழ்ச்சிகளின் பின்னர், சங்கத்தின் செயற்குழு உறுப்பினரும் இசைக் கலைஞருமான அருண் குமாரசாமியின் சப்தஸ்வரங்கள் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெறும்.

இறுதிநாளன்று, நிகழ்ச்சிகளின் நிறைவையடுத்து சங்கத்தின் செயலாளர் கலாநிதி ஸ்ரீ கௌரி சங்கர் நன்றியுரை நிகழ்த்துவார்.

இந்த விழாவில் இணைந்துகொள்ளுமாறு, உலகெங்குமிருக்கும் தமிழ் கலை, இலக்கிய ஆர்வலர்களை ஆஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம் அன்புடன் அழைக்கின்றது.

மெய்நிகர் இணைப்பு:
https://us02web.zoom.us/j/81928215942?pwd=ZHQ3VUtyZXpudNDcitpTHVTbm9JQT09
Meeting ID: 819 2821 5942
Passcode: 445435



## கருணையின் உருவே கடைக்கண் காட்டு!

**(கந்தசஷ்டி சிறப்புப் பிரார்த்தனை)**

அருமறை போற்றிடும் அரனார் மைந்தா
அரக்கரை அழித்தாய் அருளையும் கொடுத்தாய்
முரணுடைய மனத்தை பொருதிடும் குணத்தை
கறையுடை வாழ்வினைக் களைந்திடச் செய்தாய்!

உருகிடும் அடியார் உளமுறை முருகா
மருளவே நோய்கள் மாநிலம் பெருகுது
மடிகிறார் பலபேர் மயங்கிறார் தினமும்
கருணையின் உருவே கடைக்கண் காட்டு!

நரபலி எடுத்திடும் நாடகம் நடத்திறார்
நயமுடன் நடப்பதை நாளுமே மறக்கிறார்
பக்தியின் பக்கமே வந்திட மறுக்கிறார்
பரமனின் புதல்வா பாடத்தைப் புகட்டு!

- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -
(முனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேண்,ஆஸ்திரேலியா)

# லென்தோமஸ் தோட்டத்தில் மண்சரிவு; 4 வீடுகள் சேதம்





லிந்துலை - வோல்ட்றீம் தோட்டத்தின் பிரிவில் ஒன்றான லென்தோமஸ் தோட்டத்தில் 20 குடும்பங்கள் வசிக்கும் நெடுங்குடியிருப்பில் உள்ள மண்மேடு கடந்த புதன்கிழமை பெய்த மழை காரணமாக இரவு வேளையில் சரிந்து விழுந்துள்ளது.

இதனால் நான்கு வீடுகளில் உள்ள சுவர்கள் இடிந்து விழுந்துள்ளதுடன், சமயலறையிலிருந்த பொருள்கள் அனைத்தும் சேதமாகியுள்ளன.

அத்தோடு குடியிருப்பு பகுதிகளில் வெடிப்புகளும் ஏற்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 21 பேர் தற்போது தத்தமது வீடுகளிலேயே தங்கியுள்ளனர்.

எனினும், ஏனைய வீடுகளுக்கும் மண்சரிவு அபாய நிலை காணப்படுவதாகவும், இதனால் தாம் அச்சநிலையோடு இருக்கின்றோம் எனவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக இதற்கு தீர்வு பெற்று தர வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

# முப்படைகளையும் வைத்திருந்த எமக்கு இன்று மிஞ்சியது 10 எம்.பிக்கள் மட்டுமே!



## சாணக்கியன் தெரிவிப்பு

நாங்கள் முப்படையை வைத்துக் கொண்டிருந்த காலம் போய் இன்று பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டே பேச்சுக்குச் செல்லுகின்றோம்.

அவ்வாறு இருக்கையில் எமது பலம், பலவீனம் என்ன என்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

இந்த நாட்டில் தற்போதைய சூழ்நிலையில் வரலாறு காணாத அளவிற்கு மக்களின் எதிர்ப்பை சந்தித்த அரசாங்கமொன்று செயலில் இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. உண்மையில் மிகமிகக் குறுகிய காலத்தினுள் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்த அரசென்று சொன்னால் அது இதுவாகத்தான் இருக்கும்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பொதுஜன பெரமுன கட்சியின் ஐந்தாவது மாநாட்டிலேயே இதனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ராஜபக்ஷ குடும்பத்தின் மூவர் மூன்று விதமான கருத்துகளைச் சொல்லியிருந்தார்கள்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டின் மோசமான நிலைமை குறித்த உண்மையான கருத்தை இதன் போது வெளியிட்டிருந்தார். கடந்த காலங்களிலே தாங்கள் ஒரு தனிக்கட்சி என்று சொல்லிக் கொண்டிருந்த தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி, இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் கட்சி என்பன மொட்டுவின் பங்காளிகள் என்பதை இந்த நிகழ்வில் அவர்கள் உறுதிப்படுத்தியிருந்தனர்.

இவை அனைத்தையும் தாண்டி நாங்கள் தற்போது மட்டக்களப்பின் நிலைமை குறித்துப் பார்த்தால், மட்டக்களப்பில் பசளை இல்லாமல் விவசாயிகள் மிகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு இருக்கையில் பொங்கலுக்குப் பின்னர் விவசாயிகள் மில்லியனர்களாகப் போகின்றார்கள் என அலட்சியமான கதைகளையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். இதனை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

**கேள்வி :** அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திரகாந்தன் மற்றும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் ஆகியோரின் நற்பெயர் கெடும் விதமாக நீங்கள் கருத்துகள் முன் வைப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் உங்கள் கருத்து?

**பதில் :** நான் உண்மையைச் சொல்வதால் அவர்களது நற்பெயர் கெட்டுப் போகின்றது என்று சொன்னால் அது அவர்களின் தவறான செயல்களால் ஏற்பட்டவையேயாகும். முதலில் நற்பெயர் இருந்திருக்க வேண்டும். இருக்கிறதும் இல்லாமல் போகிறது என்று சொன்னால் அவர்களின் செயற்பாடுகளே காரணம்.

இதைச்சொல்லி அவர்கள் ஆதங்கப்பட்டு, கவலைப்படாமல் அவர்கள் தங்கள் வழிகளைத்திருத்திக் கொண்டு மாற்றியமைப்பார்களாக இருந்தால் எவ்வித களங்கமும் வராது.

**கேள்வி:** நீங்கள் பிரச்சினைகள் தொடர்பில் கதைக்கின்றீர்களே தவிர அதற்கான தீர்வு தொடர்பில் கதைப்பதில்லை என்று பேசப்படுகின்றது. இது தொடர்பில் உங்கள் கருத்து?

**பதில்:** வழமையாகவே ஒரு நாட்டில் ஆளுங்கட்சி எதிர்க்கட்சி என்று சொன்னால் ஆளுங்கட்சியில் இருப்பவர்களிடமே அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. மாவட்ட அரசாங்க அதிபரிடம் வெளிநாட்டுத் தூதுவரிடம் சமர்ப்பிப்பதற்கு ஒரு செயற்திட்டம் தாருங்கள் என்றால் அரசியல் பிரச்சினை என்று சொல்லி அவர்கள் பின்வாங்கும் நிலைமைகளே இருக்கின்றன.

அவ்வாறு ஒரு திட்டமொன்றே நிர்வாக ரீதியில் பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலே மக்களுக்கான தீர்வை எவ்வாறு இவர்களிடம் கோருவது? மக்களுக்கான தீர்வை வழங்குபவர்கள் ஆளுங் கட்சியினர். அவர்கள் தானே அமைச்சுப் பதவியை வைத்திருக்கின்றார்கள், அபிவிருத்திக்குழுத் தலைவர் பதவியை வைத்திருக்கின்றவர்கள்.

அவர்கள் தான் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கொடுக்க வேண்டியவர்கள். அவர்கள் உரிய தீர்வைக் கொடுத்தாலும் கொடுக்காவிடினும் மக்கள் மத்தியில் நிலவும் அன்றாட பிரச்சினைகளை எடுத்துக் கூறுவது தான் எங்கள் பொறுப்பு. அவ்வாறு எடுத்துக் கூறியும் கண்டுகொள்ளாத நிலைமையே காணப்படுகின்றது.

இருப்பினும் திக்கோடை வைத்தியசாலை விடயம் தொடர்பில் நான் நாடாளுமன்றத்தில் வாய்மொழி மூல கேள்வி கேட்டதன் பிரகாரம் அங்கு சில பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. அதே போன்று அண்மையில் மீன்பிடி அமைச்சர் களுவன்கேணியில் திறந்து வைத்த விடயம் நான் இவ்வாண்டு ஆரம்பத்தில் நாடாளுமன்றத்திலே கேட்ட கேள்விக்கான விடையே அது.

அதேபோன்று பொலன்நறுவையில் இருந்து கடுகதி ரயில் சேவையைக் கொண்டு வருவது தொடர்பில் நான் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கதைத்த விடயம் கடிதம் மூலம் பதில் கிடைத்திருக்கின்றது.

மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்தவும் நாங்கள் தேவை. அதனைத் தீர்த்து வைப்பதற்கும் நாங்கள் தான் தேவை என்று சொன்னால். அதற்கும் நாங்கள் தயார். நீங்கள் உங்கள் பதவிகளை இராஜினாமா செய்து விட்டு இருங்கள்.

எனக்கு எவ்விதப் பதவிகளும் தேவையில்லை, மாவட்ட நிர்வாக விடயங்களைக் கையாளும் அதிகாரத்தை எனது கையில் தாருங்கள் நான் எதிர்க்கட்சியிலிருந்து கொண்டே மக்களுக்கான நல்லதொரு தீர்வைக் கண்டு தருவேன்.

**கேள்வி :** தமிழ் புலம்பெயர்ந்த அமைப்புகளுடன் பேசுவதற்குத் தயாராக இருக்கிறேன் என ஜனாதிபதி தெரிவித்தார். அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினூடாக அழைத்துப் பேசுவது தொடர்பிலும் கருத்துக்கள் வருகின்றன. இது தொடர்பில் உங்கள் கருத்து?

**பதில்:** அவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினூடாக அழைத்துப் பேசுவது தொடர்பில் ஜனாதிபதி கருத்து வெளியிட்டார் என நான் அறியவில்லை. ஆனால் ஐ.நா. பொதுச் சபையிலே ஜனாதிபதி புலம்பெயர் அமைப்புகளுடன் பேசத் தயார் என்று சொல்லியிருந்தார்.

அதற்கு புலம்பெயர் அமைப்புகள் எங்களைத் தடை செய்து வைத்துக் கொண்டு எவ்வாறு எங்களுடன் பேசப் போகின்றீர்கள் என்று கேட்டிருந்தார்கள். அடுத்து வெளிவிவகார அமைச்சர் ஜி. எல்.பீரிஸ் புலம்பெயர்ந்த அமைப்புகளுடன் பேசுவதற்குத் தயார் இல்லை என்று சொல்லியிருந்தார்.

இந்த விடயத்தில் ஆளுக்கொரு கருத்தைச் சொல்லாமல் முதலில் ஜனாதிபதியும், வெளிவிவகார அமைச்சரும் பேச வேண்டும். அவர்கள் புலம்பெயர் அமைப்புகளுடன் பேசுவதற்கு எந்தத் தடையும் இல்லை.

ஆனால் இலங்கையில் மக்கள் வாக்களித்த பிரதிநிதிகளின் முக்கிய கட்சியாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இதுவரை எவ்வித பேச்சுகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. எங்களுடன் பேசுவதாகச் சொல்லிவிட்டு அதனை ஒத்திவைத்துள்ளார்கள்.

நாங்கள் ஜனாதிபதிக்கு எத்தனையோ கடிதங்கள் அனுப்பியிருக்கின்றோம். தற்போது அவர் காலநிலை மாற்றம் பற்றிப் பேசுவதற்கு ஸ்கொட்லாந்து நாட்டில் இருக்கின்றார். இந்த நாட்டில் இன வழிப்பு போன்று சுற்றுச் சூழல் அழிப்பும் நடக்கின்றது என்ற குற்றச்சாட்டு கூட இருக்கின்றது.

ஏனெனில் எத்தனையோ காடழிப்பு, மண் அகழ்வு போன்ற விடயங்கள் இடம்பெறுகின்றன. இவ்வாறு இருக்கையில் இந்த இயற்கை வளங்கள் அழிக்கப்படுவது தொடர்பில் நான் எத்தனையோ கடிதங்கள் ஜனாதிபதியிடம் நேரடியாகவே அவரது கையிலும் கொண்டு கொடுத்திருந்தேன்.

வேப்பவெட்டுவான் பிரதேசத்தில் அரசியல்வாதிகளின் அடாவடித்தனத்தால் தண்ணீர் வளம் இல்லாமல் போகின்றது. குடிதண்ணீர் இல்லாமல் போகின்றது என்பதையும் சொல்லியிருந்தேன். அதற்கும் இதுவரை பதில் இல்லை. புலம்பெயர் அமைப்புகளுடன் பேசுவது தொடர்பில் எங்களுக்கு எவ்வித ஆட்சேபனைகளும் இல்லை.

ஆனால் இந்த நாட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட எங்கள் கருத்துகளையும் கேட்க வேண்டும்.

**கேள்வி :** சர்வதேச நெருக்கடிகள் வரும் போது காலாகாலம் இலங்கை அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவோம். அவர்களுடன் பேசித் தீர்வைப் பெறுவோம் என்று சொல்லி வருகின்றார்கள். தற்போது ஜனாதிபதியின் அழைப்பை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்? அவ்வாறு அழைத்தால் எந்த அடிப்படையில் நீங்கள் அவர்களுடன் பேச்சுக்குச் செல்லக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன?

**பதில் :** தமிழ் மக்கள் எங்களுக்குத் தந்திருக்கும் மிக முக்கிய பொறுப்பு எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதுதான் . அதே பொறுப்பை ஒரு பகுதியளவிலே சில சில கட்சிகளுக்கும் கொடுத்திருக்கின்றார்கள். மக்கள் வழங்கிய ஆசனங்களினூடாக மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என்றே அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

ஆனால் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர்த்து ஏனைய கட்சிகள் மக்கள் தந்த சந்தர்ப்பத்தை வைத்துக் கொண்டு தங்கள் கட்சியை எவ்வாறு வளர்க்கலாம் என்ற நோக்கத்துடன் செயற்படுகின்றார்களே தவிர மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றிச் செயற்படவில்லை.

எமக்குத் தீர்வு கிடைப்பதாக இருந்தால் இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று இலங்கை அரசாங்கத்துடன் பேசி அனைத்து மக்களும் இணங்கி ஒரு தீர்வை அடைந்து எங்களுடைய அதியுச்ச அதிகாரப்பகிர்வுடனான தீர்வை எட்டுவது. மற்றையது நடக்குமா நடக்காதா என்று தெரியாது.

1987 ஆம் ஆண்டு இந்தியாவைப் போல ஒரு நாடு இலங்கைக்குள் வந்து ஒரு தீர்வைப் பெற்றுத் தருவது. இதில் இரண்டாவது விடயத்துக்கான சாத்தியப்பாடுகள் எத்தகையது என்பது பற்றி இன்றைய நிலையைப் பொறுத்து அனைவருக்கும் தெரியும்.

இந்தியா மாத்திரமல்ல எந்தவொரு நாடும் இன்னுமொரு நாட்டுக்குள் வந்து தீர்வைப் பெற்றுத் தருவதென்பது நடைமுறைச் சாத்தியமா என்ற கேள்வி இருக்கின்றது. அவ்வாறு இருக்கும் போது எந்த விடயத்துக்கும் முதலில் நாங்கள் பேச்சுக்குப் போகவே வேண்டும்.

பேச்சுக்குப் போகும் போது ஒரு சிலர் சொல்லலாம் இந்த விடயத்தை முன்வைத்துத் தான் பேச வேண்டும் என்று. ஆனால் பேச்சுக்குப் போகும் போது நாங்கள் திறந்த நிலையிலேயே போக வேண்டும்.

எமது மக்களின் தீர்வுக்கு என்ன தேவை என்பதில் நாங்கள் மிகத் தெளிவாக இருக்கின்றோம். அதில் எவ்விதத்திலும் பின்வாங்கப் போவதில்லை. ஆனால் மக்களின் வாக்குகளைப் பெற்று தங்கள் கட்சிகளை வளர்ப்பவர்களின் நிலைப்பாடு வேறாக இருக்கின்றது.

பேச்சுக்குப் போகக் கூடாது, பேசக் கூடாது, நிபந்தனைகளை வைத்து மாத்திரமே பேச வேண்டும் என்ற கருத்துகளும் வருகின்றன. எங்களிடமிருந்த மிகப்பெரிய பலம் இழக்கப்பட்டுள்ளதென்பதை நாங்கள் உணர வேண்டும்.

நாங்கள் முப்படையை வைத்துக் கொண்டிருந்த காலம் போய் இன்று பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டே பேச்சுக்குச் செல்லுகின்றோம். அவ்வாறு இருக்கையில் எமது பலம், பலவீனம் என்ன என்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டும்.

அத்தோடு, பூகோள அரசியலில், அயல் நாடுகளுக்கும் இலங்கைக்கும் உள்ள உறவுகள் எவ்வாறு இருக்கின்றதென்பதையும் நாங்கள் அறிந்திருக்க வேண்டும். இவ்வாறான நெருக்கம் தமிழர்களுக்குப் பாதகமாக அமையுமா? சாதகமாக அமையுமா? என்பது தொடர்பிலும் நாங்கள் ஆராய வேண்டும்.

இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், தமிழர்களையும் இந்தியா எப்போதும் கைவிடாது. அந்த நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. விரைவில் பிரதமர் மோடியுடனான சந்திப்பு இருக்கின்றது.

அது நாட்டிலா அல்லது இந்தியாவிற்குச் செல்வதா என்பது தொடர்பில் அறிவிப்பார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வுக்கு எதிரான ஒரு பேச்சுக்கும் நாங்கள் போக மாட்டோம் எனத் தெரிவித்துள்ளார்.

உ
முருகன் துணை.

நல்லூரர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# நல்லைக் கந்தன் கழற்கோர் கவிமாலை



*தனதன தனன தனதன தனன*
*தனதன தனன – தனதான*
*(01)*
*எழுகட லைகள் எனவரு மடியர்*
*துதிசெய பதிநல் – லையைமேவி*
*எழிலுறு கலியி லருளிடு வரத*
*எனவுறை முருகன் – புகழ்மாலை*
*பழுதற எழுத விழைஎன மனதுள்*
*பழகிடு தமிழை – மிகவாயே*
*பெருகிட இறைவ கணபதி யுனது*
*பதவரு ளதனை – தரவேணும்*
*அழுதழு தடியை தொழுதிடு மடிய*
*வரடைதுய ரழிய – அருள்கோனே*
*அருவரை சரிதை எழுதிய கரம*
*ததுஉடை கரிய – உருவோனே*
*கழுபிணி யகல கவிகொடு கழலை*
*கருதிட விழையு – அடிநாயேன்*
*கழலிணை யணுக கதிதனை யருளு*
*கரிமுக முடைய – பெருமானே!*

*தந்தனந்தனந்தனந்ததந்தனந்தனந்தனந்த*
*தந்த னந்த னந்த னந்த – தனதான*

*(02)*
*மங்க ளம்வ ழங்க வென்று பங்கு கொண்ட மர்ந்தி ருந்த*
*மங்கை தம்மு டன்எ ழுந்து – அருள்வேலா*
*முந்தி நம்பி யென்று வந்து அண்ட ரும்வ ணங்க கங்கை*
*முன்பு தந்த ஐங்க ரன்தன் – துணையோடே*
*செங்க டம்பு கொண்டு வந்து செம்ப தம்வ ணங்கு மன்பர்*
*சிந்தை பொங்கு வண்ண நின்று – கொடியேறி*
*சிந்தை கொண்ட அன்ப ருந்தன் செம்ப தம்பு கழ்ந்தி லங்கு*
*சிந்து சிந்தி பின்மு ழங்க – வருவேலா*
*கங்கு லுன்ப தம்நி னைந்து வந்து கந்த கந்த என்று*
*உன்னி லன்பு கொண்டு ருண்டு – வரவேதான்*
*கொண்ட துன்பு டன்க ளைந்து கந்த னுன்அ ருள்வ ழங்கி*
*இன்பு டன்வி ளங்க வென்று – அருள்வேலா*
*பங்க முன்பு கன்று பெண்கள் தம்த டம்அ ழிந்த ழிந்து*
*பஞ்சு மென்ப தம்வ ழங்க – அருள்கோனே*
*பண்பு டன்எ ழுந்து இந்த மண்ட லம்வ ணங்கு நல்லை*
*கந்த னென்று இங்க மர்ந்த – பெருமானே!*

**– கவிஞர் குகதாசன் –**

# அர்த்த கடிச்சக்கராசனம்

வாரம் ஓர் ஆசனம்



**செய்முறை :**

1. உடல் ஒரே நேர்கோட்டில் இருக்குமாறு (துடாசனத்தில்) நிற்கவும். (ஆரம்ப நிலை)

2. உள்மூச்சுடன் மெதுவாக வலது கையைப் பக்கவாட்டில் உயர்த்தி தலைக்கு மேல் கொண்டு வரவும். அடிக்கையானது வலது காதைத் தொட்டுக் கொண்டிருக்க வலது உள்ளங்கை இடப்புறம் நோக்கியதாக இருக்க வேண்டும்.

3. வெளிமூச்சுடன் இடுப்பை மெதுவாக இடப் புறம் வளைக்கவும். இடது உள்ளங்கை இடக்கால் தொடையைத் தொட்டவாறு இருக்க எவ்வளவு தூரம் கீழே போக முடியுமோ அவ்வளவு தூரம் கீழ் நோக்கி செல்லட்டும்.

4. தலையை சிறிது திருப்பி வலக்கை விரல்களின் மீது பார்வையை செலுத்தல் வேண்டும். வலக் காதின் துவாரத்தை வலக்கையின் அடிப்பகுதி மறைத்தவாறு இருக்க வேண்டும். இந்த நிலையில் நின்றவாறு சுவாசித்தல் வேண்டும்.– உச்ச நிலை

5. பின்னர் மூச்சை உள்ளிழுத்தவாறு மெதுவாக நேரான நிலைக்கு வரவும். அடிக்கையானது காதைத் தொட்டுக் கொண்டு மேல் நோக்கியிருக்க வேண்டும்.

6. மெதுவாக மூச்சை வெளிவிட்டவாறு வலக்கையை பக்கவாட்டுக்கு கீழே கொணர்ந்து ஆரம்ப நிலைக்கு வரவும்.

குறிப்பு : இதே முறையில் இடது பக்கத்திற்கும் செய்யவும். (மாற்றுப் பயிற்சி) ஒவ்வொரு பக்கமும் தலா மூன்று தடவைகள் செய்யவும்.

**பலன்கள் :**

முதுகுத் தண்டு வடம் வளையும் தன்மை அதிகரிக்கிறது. இதனால் வீரியத் தன்மையும் வலிமையும் பெறுகின்றது. பக்க மார்புத் தசைகள், இருதய நாடி, நாளங்கள், நரம்புகள் நன்கு நீட்டப்பட்டு அழுத்தப்பட்டு இரத்த ஓட்டம் அதிகரிக்கும். காதடைப்பு, கண் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு நல்லது. நுரையீரல்கள் பலப்பட்டு அதன் கொள்ளவும் அதிகரிக்கின்றது. இடுப்பு மூட்டுக்கள் வளையும் தன்மை பெறுவதால் வீரியத் தன்மை பெறுகின்றது. இடுப்பை சுற்றிய அதிகப்படியான கொழுப்புக்கள், ஊளைச்சதைகள் கரைக்கப்படுகின்றன. முதுகுவலி, முள்ளந்தண்டுவலி உபாதைகளுக்கு நல்லது. மலச்சிக்கல் நீங்குகிறது. வயிற்றுப் பகுதியில் காணப்படும் உறுப்புக்களுக்கும் உரத்தை ஊட்டுகின்றது.

**- ஸ்ரீ. நதிபரன் -**
**(யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)**

# அடக்கமுடைமை

மனித வாழ்க்கைக்குச் சிறந்த அடக்கம் தேவை. பழங்காலத்தில் அடக்கம் என்ற ஒரே சொல் பல ஒழுகலாறுகளையும் வற்புறுத்தியது. இன்று அடக்கம் என்ற பண்பு விரிந்து தனித்தனியே குறியிட்டுச் சொல்கிற வகையில் அமைந்துள்ளது. பொதுவாக மற்றவர்களிடம் அகந்தையின்றி அடக்கமுடையவராக நடந்து கொள்ளும் பண்பு. ‘பணிவு’ என்ற பிறிதொரு சொல்லால் உணர்த்தப்படுகிறது. திருக்குறள்படி பணிவுடைமையும் அடக்கமுடைமையிலேயே அடங்கியிருக்கிறது. அடுத்துத் தன்னடக்கம், நாவடக்கம், பொறிகள் அடக்கம், புலனடக்கம் என்றெல்லாம் சொல்லப் பெறுகின்றன.

மனிதன் அடைந்து ஒழுக வேண்டிய நற்பண்புகள் பலப்பல. அவற்றுள் தலையாயது தன்னல மறுப்பு. நீதியின்பால் வேட்கை, ஈகைக்குணம், அன்புடைமை இவையெல்லாம் சிறந்தனவாயினும் தன்னடக்கமில்லாது போனால், இந்தப் பண்புகள் சிறக்கா. ஆதலால் ஒழுக்கங்களுள் சிறந்தது, தலையாயது தன்னடக்கம். கிரேக்கச் சிந்தனையாளன் சாக்ரட்டீஸ் மனிதன் மேற்கொள்ள வேண்டிய முதல்நிலைப் பண்புகளாகத் தன்னடக்கத்தையும் புலனடக்கத்தையும் கூறினான்.

தன்னடக்கம் என்ற சிறந்த பண்பினைப் பெற வேண்டுமாயின் மற்றவர்களிடம் குறை காணும் தீமை அறவே கூடாது. ஒரே வழி குறை கண்டாலும் அதை இரகசியமாகக் கொண்டு பிறரிடம் கூறக்கூடாது. வீணான விவாதங்கள் அறவே கூடாது. கட்சி – பிரதி கட்சிச் சுழியில் சிக்கித் தவிக்காமல் என்றும் எப்பொழுதும் பொதுநிலை வகிக்க வேண்டும். தன்னைப் பற்றிய உயர்வு நினைவுகளை விட்டொழித்து விட்டால் அடக்கப் பண்பு வந்து விடும்.

**- தெய்வேந்திரம் வஜிதா -**
**(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)**

# வெண்மைப் புரட்சி செய்வோமா?



உலகிலுள்ள உயிரினங்களில் புனிதமாக கருதப்படுவது பசு ஆகும். அது தெய்வீகத் தன்மை வாய்ந்தது என்பதால் கோமாதா என்று அதனை அழைக்கின்றோம். பசுவினுடைய உடலெங்கும் இறைவன் வீற்றிருப்பதாக இந்துக்கள் நம்பிக்கை கொள்கின்றனர். தாய்ப்பாலுக்கு நிகராக தன் பாலைத் தந்து குழந்தைகளை வளரச் செய்வதால் கோமாதா என்று அழைப்பதில் பொருத்தப்பாடு இருக்கின்றது. வாழ்க்கையோடு பால் வெவ்வேறு நிலைகளில் தொடர்புறுகிறது.

குழந்தை தாய்ப்பாலை பருகுகிறது. இறந்த பின் அவருக்கு வாயிலே பாலூற்றி நிறைவு செய்கிற செயற்பாடும் எம்மிடம் உள்ளது. கிரிகைகள் யாவற்றிலும் பால் சிறப்பிடம் பெற்றிருக்கிறது. பஞ்சகௌவியம் எனப்படும் புனித பொருளினுடைய தயாரிப்பிற்கு பிரதான இடம் வகிப்பது பசுவினுடைய பெறுவிகளே.

இத்தகைய பசுக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் சூரியப்பொங்கலுக்கு மறுநாள் பட்டிப்பொங்கல் என்கிற விழா எடுத்து மரியாதை செய்கிறோம். ஆயினும் நமது ஆலயங்களில் எத்தனை ஆலயங்களில் பசுக்களைப் பேணத் தலைப்பட்டுள்ளன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இன்று நாட்டில் பால்மாவிற்குப் பெரும் தட்டுப்பாடு, விலையேற்றம் என்று வேதனைப் படுகின்றோம். எம்மால் ஆகக்கூடிய, எம்மால் செயற்படுத்தக் கூடிய வளமாக பசுவை, பசுக்களை வளர்க்கும் செயற்பாடு இருக்கிறது. ஆலயங்கள் பசுக்களைப் பேணும் மையங்களாக இருக்க வேண்டும். கோவில் தேவைகளுக்குப் பால் கிடைப்பதோடு அல்லாமல் கோவிலைச் சுற்றியுள்ள குடிகளுக்கும் பால் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இதனால் ஏற்படும். வேலைவாய்ப்பும் ஏற்படக்கூடிய வாய்ப்பும் உருவாகும். இந்துக்கள் பசுவை கோமாதா எனத் தெய்வமாகப் போற்றும் நிலையில் பால் உற்பத்தியில் ஆலய அறங்காவலர்கள் ஈடுபாடு காட்டுவதன் ஊடாக ஒரு வெண்மைப்புரட்சியை ஏற்படுத்த முடியம். பசுவதையைத் தடை செய்யவேண்டும் என்ற குரல் ஓங்கியொலிப்பதற்கும் ஆலய நிர்வாகஸ்தர்கள் தலையீடு செய்து பங்களிக்க முடியும்.

**– செந்தமிழ் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் -**

காலைக்கதிர் Kalaikkathir

# 3,400 கிலோ மஞ்சளுடன் வந்த இந்திய மீனவர்கள் ஐவர் கைது





(ந.லோகதயாளன்)

புத்தளம் கடற்பரப்புக்குள் மஞ்சளுடன் உள்நுழைந்த இந்திய மீனவர்கள் ஐவரைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இலங்கையில் நிலவும் மஞ்சள் தட்டுப்பாட்டையடுத்து தமிழகத்திலிருந்து மஞ்சள் கடத்தும் நடவடிக்கை அதிகரித்து வருகின்றது. இந்நிலையில், நேற்றுமுன்தினம் தமிழகத்தில் இருந்து ஒரு நாட்டுப் படகில் கடத்தி வரப்பட்ட 3 ஆயிரத்து 400 கிலோகிராம் மஞ்சளே கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் ஐவரும் புத்தளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமிழகம் - தூத்துக்குடிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வவுனியாவில் மேலும் 16 பேருக்குத் தொற்று

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் 4 சிறுவர்கள் உட்பட 16 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டோரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில வெளியாகியுள்ளன.

அதில், நெடுங்குளம் பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 வயதுடைய இரு சிறுவர்களுக்கும், பரசங்குளம் பகுதியைச் சேர்ந்த 3 வயது சிறுமி ஒருவருக்கும், கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த ஒரு வயது சிறுவன் ஒருவருக்கும் என 4 சிறுவர்கள் உட்பட 16 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

### சுமந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தற்போதைய ஏற்பாட்டின்படி சுமந்திரன் உட்பட மூன்று நிபுணர்குழு இன்னும் 10 நாள்களில் அமெரிக்க இராஜாங்க அமைச்சுடனும், அதன் சட்ட நிபுணர்களுடனும் விரிவான பேச்சுக்களில் ஈடுபடும் எனத் தெரிகின்றது.

இந்தக் குழுவிற்கு ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனுடன், ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரன், சட்ட நிபுணர் திருமதி நிர்மலா சந்திரஹாசன் ஆகியோரை சம்பந்தன் நியமித்துள்ளார் என அறிய வந்தது.

தந்தை செல்வநாயகத்தின் புதல்வர் எஸ்.ஜே.வி.சந்திரஹாசன். அவரின் துணைவியார் நிர்மலா சந்திரஹாசன். இவர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும், நல்லூர்த் தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இரும்பு மனிதர் என அழைக்கப்பட்டவருமான இ.மு.வி.நாகநாதனின் மகளாவார். தற்போது இந்தியாவில் உள்ள அவர் கொழும்புக்கு வந்து, மற்ற இருவருடனும் இணைந்து வொஷிங்டன் பயணமாவார் எனக் கூறப்பட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான திட்டங்கள், யோசனைகளைப் பரிந்துரை செய்வதற்காக 2006 இல் நியமித்த அனைத்துத் தரப்பு நிபுணர் குழுவில் சுமந்திரன் தவிர்ந்த மற்றைய இருவரும் இடம்பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வொஷிங்டன் – புதுடில்லி அரசுகளின் மிக, மிக உயர்ந்த மட்டத்தில் எடுக்கப்பட்ட மிக முக்கிய தீர்மானத்திற்கு அமையவே இந்தக் காய் நகர்த்தல் மேற்கொள்ளப்படுவதாக அறிந்துள்ள கொழும்பு அரசு வட்டாரங்கள், அதனால் பெரும் கலக்கத்தில் மூழ்கி இருக்கின்றன என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த விடயத்தை அறிந்த பின்னரே, புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சு, தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் கலந்துரையாடல் என்ற அறிவிப்புகளை எல்லாம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவிழ்த்து விட்டார் என்றும் சம்பந்தப்பட்ட கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கெரவலப்பிட்டிய மின் நிலையப் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு அவசர அவசரமாக – இரவோடிரவாக – கைமாற்றும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு, அமெரிக்காவைத் தாஜா பண்ணும் நடவடிக்கையில் – தனது பங்காளிக் கட்சிகளின் கடும் எதிர்ப்பையும் மீறி – கோட்டா அரசு ஈடுபட்டமையின் பின்னணி இதுதான் என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இந்த வொஷிங்டன் சந்திப்பு முதலில் செப்டம்பரில் நடைபெறுவதாக இருந்தது. அச்சமயத்தில் சுமந்திரனுடன் சட்டத்துறை நிபுணர்களான பேராசிரியர் என் செல்வகுமாரன், திருமதி நிர்மலா சந்திரஹாசன் ஆகியோரை சட்ட நிபுணர் குழுப் பிரதிநிதிகளாக சம்பந்தன் நியமித்திருந்தார். மூவரின் பயணத்திற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

எனினும், கொரோனாத் தொற்று நெருக்கடி காரணமாக இந்தக் கலந்துரையாடல் தள்ளிப்போனமையால் பேராசிரியர் செல்வகுமார் இந்த மாத நடுப்பகுதியில் அமெரிக்கா செல்ல முடியாது எனத் தெரிவிக்கப்பட்டது. அதனால் அவரது இடத்துக்கு ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரனை சம்பந்தன் நியமித்துள்ளார். அடுத்த வாரத்தில் இக்குழு கொழும்பிலிருந்து வொஷிங்டன் பயணமாகும் எனத் தெரிகிறது.

### இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் இடைக்கால அறிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான விசாரணை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் செயலாளர் அப்சரா கல்தேரா தெரிவித்தார்.

திருக்குமார் நடேசனின் வங்கி நடவடிக்கைகள் மற்றும் அரச நிறுவனங்களில் பெற்றுக்கொண்ட ஆவணங்கள் தொடர்பிலான மதிப்பீடுகள் இடம்பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, பென்டோரா பேப்பர்ஸ் ஆவணத்தில் வெளியாகிய விடயங்கள் தொடர்பில், சிறையிலுள்ள ரஞ்சன் ராமநாயக்கவிடம் வாக்குமூலமொன்றை பெறுவதற்கு இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

ரஞ்சன் ராமநாயக்க முன்வைத்த கோரிக்கைக்கு இணங்கவே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய அவர் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்படவுள்ளார் என்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

### மீளவும் எகிறும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குணமடைந்துள்ளனர்.

இதேவேளை, நாட்டில் மேலும் 15 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 08 ஆண்களும், 07 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 806 ஆக அதிகரித்துள்ளது.

## மஞ்சள் கடத்த முயன்ற மூவர் மன்னாரில் கைது

(ந.லோகதயாளன்)



தமிழகத்தில் இருந்து மன்னார் கடல் வழியாக மஞ்சள் கடத்த முயன்ற மூவர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் கடற்பரப்புக்குள் மஞ்சளுடன் உள்நுழைந்த மன்னாரைச் சேர்ந்த ஒரு விசைப்படகில் பயணித்த மன்னார் மீனவர்கள் மூவர் கடற்படையினரால் நேற்று காலை கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து 376 கிலோகிராம் மஞ்சளும் கடற்படையினரால் மீட்கப்பட்டது.

## நாடு திரும்பினார் ஜனாதிபதி கோட்டா



ஸ்கொட்லாந்தின் க்ளாஸ்கோ நகரில் நடைபெற்ற காலநிலை மாற்றம் தொடர்பான அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பினார்.

நேற்று காலை 8.30 மணியளவில் எமிரேட்ஸ் விமானம் மூலம் ஜனாதிபதி மற்றும் அவரது பாரியார் ஆகியோர் நாட்டை வந்தடைந்தனர்.

காலநிலை மாற்றம் தொடர்பான அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி கடந்த 30ஆம் திகதி ஸ்கொட்லாந்து பயணமாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.